## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கதயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறானகூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை கருத்திற் கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களைஉள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ்கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள்தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவாஎன்பதனைமதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 7,658,339 மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,043,684 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6,614,655 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது அதிகாரசபையின் நிகழ்ச்சித் திட்டத்திற்கான செலவுகள் 71 சதவீதத்தினால் குறைவடைந்தமை , ஒட்டுமொத்த செலவுகள் 22 சதவீதத்தினால் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 முக்கிய வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப்பகுப்பாய்வு

அதிகாரசபைக்கு முன்னைய ஆண்டில் வெளிநாட்டு மானியங்கள் ரூபா 7,063,075, பெறப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் வெளிநாட்டு மானியங்கள் பெறப்படவில்லை என்பதுடன் அரசாங்கத்தின் உள்நாட்டு மூலதன மானியங்கள் முன்னைய ஆண்டுடன்

ஒப்பிடும்போது ரூபா 2,573,300 ஆல் , அதாவது 130 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அதிகாரசபையின் ஆளணி வேதனம் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவு முறையே ரூபா 4,204,690 ஆல் மற்றும் ரூபா 6,464,553 ஆல் அதாவது 26 சதவீதத்தினால் மற்றும் 71 சதவீதத்தினால் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையினால் முறையே ரூபா 566,465 மற்றும் ரூபா 301,490 செலவிடப்பட்டு பொதுமக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு”VNATA Media Violatioṅ” மற்றும் அதிகாரம் பெற்ற அதிகாரிகளுக்கு "VNATA Authorized Officer's'' ஆகிய நடமாடும் தொலைபேசி பயன்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் கடன் அட்டை மூலம் செலுத்த வேண்டிய மாதாந்த Server using charges செலுத்துவதற்காக கடன் அட்டை வசதிகளுடன் கூடிய குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டமொன்று அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதற்கு பதிலாக அதிகாரசபையின் தலைவரின் தனிப்பட்ட கடன் அட்டை மூலம் பணம் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக அதிகாரசபையின் தலைவர்கள் மாறியபோது, சிறிது காலத்திற்கு இந்த இரு பயன்பாடுகளும் செயலற்றுக் காணப்பட்டன.அதன்படி, இந்த விண்ணப்பம் 2023 பெப்ரவரி முதல் மே வரை சுமார் 4 மாத காலமொன்றுக்கு செயலற்றுக் காணப்பட்டன.மேலும் இந்த இரண்டு பயன்பாடுகளையும் மீண்டும் செயற்பாட்டு நிலைமைக்கு கொண்டு வருவதற்கு ரூபா 58,000 மேலதிக செலவொன்று ஏற்பட்டது. அத்துடன் இந்த இரண்டு பயன்பாடுகளின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக வழங்குநருடன் எழுத்துப்பூர்வ ஒப்பந்தமொன்று எட்டப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையின் தலைவரின் கடன் அட்டை மூலம் பணம் செலுத்தப்பட்டபோது மாதாந்தம் ரூபா 6000-8000 இற்கு இடைப்பட்ட அளவொன்று மட்டுமே செலவு செய்யப்பட்டதால் தலைவரின் கடன் அட்டை மூலம் இந்த பணம் செலுத்தப்பட்டது. அதிகாரசபையின் தலைவர்கள் இடமாற்றம் செய்யப்படும்போது இந்த கடன் அட்டை அகற்றப்பட பெற வேண்டியிருப்பதால், கடன் அட்டை வசதியை அதிகாரசபைக்கு பெற்றுத்தர இரண்டு அரச வங்கிகளுடன் ஆலோசித்தபோதும், அவ்வாறு கடன் அட்டை வசதியை அதிகாரசபைக்கு வழங்குவதில் சிரமம் இருப்பதாக அவ்வங்கிகளின் மூலம் தெரிவிக்கப்பட்டது.<br><br>அதன் பிரகாரம் புதிய தலைவரின் கடன் அட்டையின் மூலம் Server Using Charges கொடுப்பனவு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் செலுததப்பட்டது.<br><br>அத்துடன் 2023 இன் முதல் மாதங்களில Server Using Charges செலுத்தப்படாமையால் இப்பயன்பாடு 2023 பெப்ரவரி 01 இல் தானாகவே செயலற்றுப் போயிருந்ததுடன் பயன்பாடுகளை மீண்டும் செயற்படுத்துவதற்கு ரூபா 58,000 செலவிடப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டில் இப்பயன்பாடுகளை வடிவமைத்த நிறுவனத்துடன் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்வது குறித்து | நடமாடும் தொலைபேசி பயன்பாடுகள் சேவையை தொடர்ந்து செயற்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கேட்கப்பட்டபோது, ரூபா 1,875,000 இற்கு தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் சேர்க்கப்படடு நாளதுவரையாக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்தம் செய்வதற்கு விரப்பம் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்துடன் ஒப்பந்தம் செயவதற்கு மேற்படி தொகை செலவிடப்பட்டுள்ளது. . | |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் அதிகாரசபையின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 5 ஆக இருந்ததுடன் 2024 ஏப்ரல் 30 இல் அந்த வெற்றிடங்களின எண்ணிக்கை 6 ஆகவும் அதிகரித்தது. மேற்படி வெற்றிடங்களில் பொது முகாமையாளர் பதவிகள் 2022 ஜுலை 27 முதல் தற்போது வரையும், நிர்வாக அதிகாரி பதவி 2024 மார்ச் 04 முதல் தற்போது வரை வெற்றிடமாகக் காணப்படுகின்றன. அவ்வாறே முழு நேர சேவையில் ஈடுபடுத்த வேண்டி தேவைப்படும் மதியுரையாளர் மற்றும் சட்ட அலுவலர் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பொது முகாமையாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான நடவடிக்கைகளை அதிகார சபை தொடர்ந்து முன்னெடுத்து வந்ததுடன், அந்த பதவியை நிரப்புவதற்குத் தேவையான அங்கீகாரம் அதிகார சபைக்கு இதுவரை கிடைக்கவில்லை. இந்த பதவிக்கு ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்காக தயாரிக்கப்பட்ட இறுதி அமைச்சரவை பத்திரத்திற்கு உரிய அங்கீகாரம் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.<br><br>நிர்வாக அதிகாரி பதவிக்கான ஆட்சேர்ப்பிற்காக தற்போது அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அங்கீகாரம் இன்னும் அதிகாரசபைக்கு பெறப்படாததால், அந்த அங்கீகாரம் கிடைத்தவுடன் உரிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.<br><br>மனநல ஆலோசகர் மற்றும் சட்ட அலுவலர் ஆகிய இரண்டு பதவிகளுக்கும் முழு நேர சேவையில் | அதிகார சபையின் பணிகளை முறையாக மேற்கொள்ளும் வகையில் வெற்றிடங்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஈடுபடுத்த வேவையான ஏற்பாடு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். . | |

**4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய. 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்ந 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் குறிப்பிட்ட திகதிக்கு 60 நாட்கள் தாமதமாகி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அதிகார சபையின் கணக்காளர் (நிரந்தர) 2024 பெப்ரவரி 14 வரை பிரசவ விடுமுறையில் இருந்ததால் , அதற்குப் பதிலாக பதிற் கடமை புரிந்த சுகாதார இராஜாங்க அமைச்சின் தலைமைக் கணக்காளரின் வேலைப்பளு காரணமாக அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவருக்கு நேரம் குறைவாக இருப்பதாக தெரியவந்தது. அதிகார சபையின் நிரந்தர கணக்காளர் மீண்டும் சேவைக்கு சமூகமளித்ததன் பின்னர் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு 2023 மார்ச் 25 இல் பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கிணங்க 2024.04.04 அன்று நடைபெற்ற அதிகாரசபையின் கணக்காய்வு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு 2024.04.29 அன்று நடர்தப்பட்ட பணிப்பாளர் சபையில் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் 2024.04.30 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.எதிர் காலத்தில் இவ்வாறான காலதாமதங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தி உரிய காலத்திற்குள் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதாகவும் , அதற்கு | சுற்றறிக்கையின் பிரகாரம் காலதாமதமின்றி நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முன்னர் கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன். | |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின் 4.4 பந்தி பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | அதிகாரசபையிற்காக உள்ளகக் கணக்காய்வாளர் பதவி அங்கீகரிக்கப்படவில்லை ஏ்ன்பதால், வரிசை அமைச்சான சுகாதார அமைச்சினால் உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் , அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவின் பதவியணியின் பற்றாக்குறை காரணமாக மேற்கொள்ளப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |